**Starting time 11.46 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 32/2015**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 04.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>** நான் வாதி அழைத்தன் பேரில் தான் சாட்சியம் ளிளக்க வந்துள்ளேன் என்றால், ஆமாம். தாவா சொத்தின் புல எண். என்ன என்றால், 177/2 ஏ. அந்த புல எண் உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன் என்னவாக இருந்தது என்றால், 177 ஆக இருந்தது. அதன் விஸ்தீரணம் என்ன என்றால், 2 ஏக்.81 செண்ட். புல எண். 177 எப்போது 2 ஏ, 2 பி, 2 சி எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 2 பி மற்றும் 2 சி யாருக்கு உரிமையானது மற்றும் அதன் விஸ்தீரணம் என்ன என்றால், எனக்கு 2 ஏ பற்றி மட்டும் தான் தெரியும். அதில் பிரச்சனை இருப்பது தெரியும்.

2. தாவா சொத்தில் அமைந்துள்ள பாதையின் கிழமேல் 9 அடி அகலம், 75.6 மீ நீளம் ஆகியவை குறித்து எந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ராமசாமி மனைவி திருமாயி அம்மாள் வாங்கிய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் அதுபற்றி எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சாட்சி ஆணத்தை பார்த்துவிட்டு 11-ஆம் பக்கத்தில் மலைக்கு போகும் வண்டித்தடத்திற்கு மேற்கு, இதன் மத்தியில் 2 ஏக்.81 செண்ட்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வண்டித்தடத்தின் நீளம், அகலம் பற்றி குறிப்பிடவில்லை என்று கூறுகிறார்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண். 177/2-ல் உள்ள 3 ஏக் 89 செண்ட்டில் 2 ஏக் 81 செண்ட்டிற்கு தான் செக்குபந்தி விவரம் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் செக்குபந்தி விவரமாக சின்னாகவுண்டர் தடத்திற்காக கிரயம் செய்திருக்கும் நிலத்திற்கும் வடக்கு, சின்னாக்கவுண்டர் வேலாயி நிலத்திற்கும் கிழக்கு, வேலாயி நிலத்திற்கும் தெற்கு, மலைக்கு போகும் வண்டித்தடத்திற்கும் மேற்கு, இதன் மத்தியில் தான் 2 ஏக். 81 செண்ட் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

4. வாதியின் நிலத்தில் கிழபுறத்திலும் தென்வடல் வண்டித் தடத்திற்கு மேற்கிலும் கிணறு இருக்கிறது என்றால், ஆமாம். அந்த கிணற்றுக்கு கிழபுறத்தில் தென்னை மரங்கள் இருக்கிறது என்றால், ஆமாம். அதன் வயது 30, 40 இருக்கும் என்றால், ஆமாம். பாதைக்கு மேற்குபுறத்தில் வேலாயி நிலத்தில் தென்னை மரங்கள் இருக்கிறது என்றால், ஆமாம். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் உடனிருந்தேனா என்றால், இல்லை. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையிலேயே வேலாயி நிலத்தில் தென்னை மரங்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றாலும், நான்தான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

5. புல எண். 177/2 ஏ வடபுறத்தில் கிழக்கு பக்கமாக மலை வரை செல்லும் பாதை இருக்கிறது என்றால், ஆமாம், அதன் அளவு என்ன என்றால் அதுபற்றி தெரியாது. அந்த பாதை சுமாராக எவ்வளவு அடி இருக்கும் என்றால், 10 அடி இருக்கும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. தம்மம்பட்டியிலிருந்து கெங்கவல்லி செல்லும் பிரதரான சாலையிலிருந்து பிரிந்து மலை வரை செல்கிறது என்றால், ஆமாம். அந்த பாதை எத்தனை வருடங்களாக செல்கிறது என்றால், எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் இருக்கிறது. அன்றைய தேதியல் எந்த அளவில் பாதை இருந்ததோ அதே அளவில் தான் தற்போதும் செல்கிறது என்றால், ஆமாம்.

6. அந்த பகுதி விவசாயிகள் தங்களுடைய விளை பொருள்களை எடுத்துச் செல்ல அந்த பாதையை தான் பயன்படுத்துகிறார்கள் என்றால், ஆமாம். பிரதிவாதிகள் எத்தனை வருடங்களாக ரிக் வண்டி வைத்து ரிக் தொழில் செய்து வருகிறார்கள் என்றால், 20

வருடங்களாக செய்து வருகிறார்கள். வெளியூரில் வேலை முடிந்த பிறகு நிலத்தில் தான் ரிக் வண்டிகளை நிறுத்தி வைத்திருப்பார்கள் என்றால், அவ்வாறு இல்லை, வரப்போக இருக்கிறார்கள்.

7. பிரதிவாதிகள் எனக்கு எந்த வகையில் நெருங்கிய உறவினர்கள் என்று எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால், உறவினர்கள் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன். வாதியும் எனக்கு உறவினர்தான் என்றால், ஆமாம். அதுபற்றி என்று எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால், ஆமாம். வாதி கேட்டுக் கொண்டதற்காக பத்திரத்திலேயே இல்லாத அளவில் வண்டிப்பாதை செல்வதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

8. 4-ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் என்ன என்றால், முத்துசாமி. அவர் 1-ஆம் பிரதிவாதிக்கு என்ன உறவு என்றால், மைத்துனர். ஆனால் நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4-ஆம் பிரதிவாதி 1-ஆம் பிரதிவாதியின் மூத்த சகோதரர் என்று கூறியுள்ளேன் என்றால், தவறுதான். உறவு முறையை பற்றியும் வழக்கு சொத்து விவரம் குறித்தும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. புல எண். 177/2 பி மற்றும் 2 சி-ல் உள்ள சொத்துக்கள் யாரிடமிருந்து யார் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

9. வாதிகள் நிலத்தில் உள்ள கிணற்றுக்கு அருகில் மண்மேடு இருந்தது என்றால், அவர்கள் தான் வெட்டி எடுத்தார்கள், அதனால் தான் பிரச்சனை வந்தது. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால், ஆமாம். தற்போது கேட்டதால் கூறுகிறேன். அந்த கிணற்று மேட்டில் இருந்த செடிகள் தான் பாதையை மறித்துக் கொண்டிருந்ததால் அதைதான் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக கருதி பிரதிவாதிகள் அதை அகற்றினார்கள் என்றால், சரியல்ல.

10. 2-ஆம் பிரதிவாதியின் நிலத்தின் மேற்குபுறத்தில் உள்ள கல்கட்டை எந்த வருடம் கட்டினார்கள் என்றால், எப்போது கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் இந்த வருடம் போன போது இருந்தது. அந்த கல்கட்டு கட்டி 20 வருடங்கள் ஆகிறது என்றாலும், பஞ்சாயத்துதான் அதை கட்டியது என்றாலும், சரியல்ல. எந்த தேதியில் எந்த வருடத்தில்

பிரதிவாதி என்ன ஆவணம் கொடுத்தார், யார் பஞ்சாயத்து செய்தார்கள் போன்ற விவரங்கள் எனது சாட்சியத்தில் நான் சொல்லவில்லை என்றால், நான் கேள்விப்பட்டதை தான் கூறுகிறேன். தேதி தெரியாது.

11. 2-ஆம பிரதிவாதியின் நிலத்தில் பாதையை அகலப்படுத்த யார் அறிவுறுத்தினார்கள் என்று நான் சாட்சியத்தில் குறிப்பிடவில்லை என்றால், நாங்கள் தான் பேசப்போனோம், அப்போதுதான் வாதி, பிரதிவாதி இருவரும் தலா 9 அடி விடுமாறு சொன்னோம். மேற்படி சங்கதியை நான் என்னுடைய சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால், ஆமாம், தற்போது கேட்டதால் சொல்கிறேன். நான் பஞ்சாயத்திற்கே செல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பஞ்சாயத்திற்கு சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதி மண் மேட்டிலிருந்து செடி கொடிகள் பாதையை ஆக்கிரமித்ததால் தான் அதை அகற்றினார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.14 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**